பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 19 வெள்ளிக்கிழமை 01.04.2022 கதிர் 16

# ஊரடங்கு தளர்வு!

## விசாரணை வேட்டை ஆரம்பம்

கொழும்பில் சில பொலிஸ் பிரிவுகளுக்கும், களனி பொலிஸ் பிரிவுக்கும் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது.

மிரிஹான மற்றும் களனிப் பகுதிகளில் 2

# 45 பேர் கைது!

மிரிஹான பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் இதுவரை பெண்ணொருவர் உட்பட 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்

அத்துடன், அவசர நிலைமை கருதி பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை ஏற்றி வந்த பொலிஸ் பஸ் ஒன்றுக்கும், பொலிஸ் ஜீப் ஒன்றுக்கும், இரு சைக்கிள்களுக்கும் போராட்டக்காரர்களால் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல்களில் சுமார் 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று போராட்டக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி இல்லம் சுற்றிவளைப்புப் போராட்டம்

## விசேட அதிரடிப் படையினர் 24 பேர் உட்பட 37 பேர் கொழும்பு வைத்தியசாலையில்!



மிரிஹான பகுதியில் ஜனாதிபதி இல்லத்தைச் சுற்றிவளைத்து நேற்றிரவு மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின்போதும், அதன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களிலும் 37 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விசேட அதிரடிப் படையினர் 24 பேர், மூன்று பொலிஸார், மூன்று ஊடகவியலாளர்கள் மற்றும் 7 பொதுமக்கள் ஆகியோரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# போராட்டத்தின் பின்னணியில் அடிப்படைவாதக் குழுவினர்!

## இப்படிக் கூறுகின்றது கோட்டாவின் ஊடகப் பிரிவு



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்குச் செல்லும் வழியில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னணியில் அடிப்படைவாதக் குழுவே செயற்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

**இலங்கையிலும் அரபு வசந்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.** 2

# இரவு 10 மணிக்குப் பின்பே போராட்ட வடிவம் மாறியது

## 3.9 கோடி ரூபா இழப்பு என்கிறது பொலிஸ்



மிரிஹான பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தால் ஏற்பட்டுள்ள சொத்து இழப்பு சுமார் 3.9 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உட்பட 2

# ஞாயிறு ஊரடங்குச் சட்டமா? இல்லை என்கிறது பொலிஸ்

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் எதிர்வரும் 3ஆம் திகதி அரசுக்கு எதிரான தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, அன்றைய நாளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# பரபரப்புக்கு மத்தியில் மாலை கூடுகிறது சு.க.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று மாலை கூடுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலைமை, மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரச எதிர்ப்பு அலை மற்றும் கட்சியின் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளன.

## யாழில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் குழப்பம்

# கோட்டாபயவுக்கு ஆதரவு தெரிவித்த அருண் சித்தார்த்தனுக்குச் செருப்படி





(இ.கலையமுதன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்தில் 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## கோட்டாபயவுக்கு ஆதரவு தெரிவித்த ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை வந்தடைந்த இறுதி நேரத்தில் அங்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அருண் சித்தார்த்தன் தலைமையிலான குழுவினர் குரல் எழுப்பிய வேளை முறுகல் நிலை உருவானது. அதன்பின்னர் கைகலப்பும் உருவானது.

இதன்போது அருண் சித்தார்த்தனையும், அவரின் குழுவினரையும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் செருப்பால் அடித்துத் தாக்கினர்.

பதற்றத்தைத் தணிப்பதற்காகப் பொலிஸார் குவிக்கப்பட்டு அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இந்தக் கைகலப்பில் சிலர் காயமடைந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் கட்சியினர் தொடர்ந்தும் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தமையுடன் குழப்பவாதிகளுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர்.

குழப்பத்தில் ஈடுபட்ட அருண் சித்தார்த்தன் தலைமையிலான குழுவினரைப் பொலிஸார் அங்கிருந்து பாதுகாப்பாக ஓட்டோவில் அனுப்புவதற்கு முயற்சித்த வேளை போராட்டக்காரர்கள் ஓட்டோவையும் முற்றுகையிட்டனர். பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் பொலிஸார் ஓட்டோவை அங்கிருந்து அனுப்பிவைத்தனர்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர, உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஊரடங்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரி நேற்றிரவு வெடித்த மக்கள் போராட்டங்களால், கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு, நுகேகொடை, கல்கிஸை மற்றும் களனி பொலிஸ் பிரிவுகளுக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மக்கள் போராட்டம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையிலேயே, ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது.

அதேவேளை, போராட்டங்களின் பின்புலம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## போராட்டத்தின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரும்புக் கட்டைகள், பொல்லுகள் மற்றும் ஆயுதம் ஏந்திய கும்பல், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு மிரிஹான பெங்கிரிவத்தையில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கிப் பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் திட்டமிட்ட அடிப்படைவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் நாட்டில் அரபு வசந்தத்தை உருவாக்க வேண்டும் என்ற பிரசாரத்தை முன்னெடுத்துள்ளனர்.

சமூக ஊடகங்களை அநாமதேயமாகப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கில் இந்தக் கலவரம் நடத்தப்பட்டுள்ளது எனக் கைதுசெய்யப்பட்டவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இரவு 10 மணிக்குப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

53 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பல குழுக்கள் இதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளன. சி.ஐ.டியினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் தேசிய வைத்தியசாலை, களுபோவில மற்றும் பொலிஸ் வைத்தியசாலைகளில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போராடும் உரிமையை பொலிஸார் மதிக்கின்றனர். இது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும், அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் உள்ளிட்ட சம்பவங்களின்போது பொலிஸாருக்கு அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.

நேற்று மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை அமைதியாக இடம்பெற்ற போராட்டம், இரவு 10 மணிக்குப் பிறகே மாற்றம் பெற்றுள்ளது. அதுவரை பொலிஸாரும் அமைதியாகவே செயற்பட்டனர். நிலைமையைக் கட்டுப்படுத்தவே குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளனர் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION

MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE

BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நிலைமையை மோசமாக்கும் அரசு

பட்டறிவிலிருந்து – அனுபவங்களிலிருந்து – பாடம் படிக்காதவனை முட்டாள் என்போம். அப்படி அறிவிலித்தனமான வேலையைத்தான் இந்த ஆட்சிப் பீடம் செய்ய விழைகிறது. அது வேடிக்கையானது.

தேசியப் பிரச்சினைகளைக் கையாளும் விடயங்களில் உண்மைகளை மூடி மறைத்து, அர்த்தமற்ற கற்பிதங்களை முன்னிறுத்தி, விவகாரத்தைத் திசை திருப்ப எத்தனிப்பது விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

இலங்கையின் எதிர்காலத்தையே புரட்டிப்போட்ட மோசமான நிகழ்வுகளில் ஒன்று 1983 ஜுலைக் கலவரம் ஆகும். அப்போதே ஆட்சிப் பீடத்தின் பின்புல ஆதரவுடன் திட்டமிடப்பட்ட வன்முறைப் பிரளயமாக அது வெடித்தது.

அந்த உண்மைகளை தெரிந்து கொண்டும் – புரிந்து கொண்டும் – அந்த கலவரங்களுடன் அச்சமயத்தில் தொடர்பேயில்லாத ஜே.வி.பியின் மீது அந்த கொடூரத்தின் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, தொடர்புபடுத்தி அந்த அமைப்பை தடை செய்து, விடயத்தை திசை திருப்ப முயன்று ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தப் பார்த்தது ஜெயவர்தன அரசு.

அந்த வரலாற்றுத் தவறுகளின் விளைவுகளை கொடூர இனப்போராக அடுத்த மூன்று தசாப்தங்கள் இலங்கை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

83 ஜுலை கலவரங்களுக்கு காரணமான அடிப்படை பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்க்கத் தவறியதே அரசு, அந்த கொடூரங்களின் சூத்திரதாரிகளை விடுத்து வேறு ஒரு தரப்பு மீது பழியைப் போட்டு தப்பவும் பார்த்தது.

அதே வேலையைத் தான் இப்போதைய கோட்டாபய அரசும் செய்ய விழைகின்றது. நேற்று முன்னிரவில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள மிரிஹான பகுதியில் மக்கள் எழுச்சியால் – எதிர்ப்பால் – வெடித்த ஆர்ப்பாட்டங்களுக்கு, ஜே.ஆர். அரசு 1983 ஜுலையில் நடந்தமை போல தவறான கற்பிதங்களைக் கற்பித்து, விடயங்களைத் திசை திருப்ப முயல்கின்றது கோட்டாபய அரசு.

நாட்டில் மக்கள் சகிக்கவே இயலாத பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் மோசமான இக்கட்டு. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் மட்டுமல்லாமல், விளிம்புநிலைக் குடும்பங்களும் மோசமான நெருக்கடியை சந்திக்கும் அளவுக்கு பிரச்சினைகள் எல்லை மீறி விட்டன. பண நோட்டுக்களைக் கையில் வைத்திருப்பவன் கூட எரிபொருள் இன்றி, எரிவாயு இன்றி, மின்சாரம் இன்றி, அத்தியாவசியப் பாவனைப் பொருள்கள் இன்றி வீதியில் நிற்கும் பேரவல நிலைமை.

ஆட்சிப் பீடத்தின் முறையற்ற அணுகுமுறையால் பேரிடருக்குள் சிக்கி இருக்கின்றோம் என்ற எரிச்சலுடன் துவண்டு கிடக்கும் மக்கள், அந்த சீற்றத்தின் பேரெழுச்சியாக தாங்களாகவே – சுயமாகவே – இயல்பாகவே – வேறு வழியின்றி, வீதிக்கு இறங்குவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். பிழையான – தவறான – வாக்குறுதிகளை தந்து, நம்பிக்கையை ஏற்படுத்தி, வாக்குகளை சுருட்டிக் கொண்ட ஆட்சித் தலைவர், இப்போது தங்களைக் கைவிட்டு, நட்டாற்றில் தள்ளி, பேரவலத்துக்குள் மூழ்கடித்திருக்கின்றார் என்ற சீற்றம் – ஆதங்கம் – நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருப்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அந்த கோபத்தின் – வெப்பியாரத்தின் – முதல் நடவடிக்கைதான் நேற்றிரவு மிரிஹானவில் வெடித்தது.

அந்த மக்களின் இயல்பான சுய எழுச்சிக்கு அடிப்படைவாதிகளின் கைவரிசை என்றும் தீவிரவாத குழுக்களின் சதித்திட்டம் என்றும் தவறான கற்பிதங்களை – அர்த்தங்களை – கொடுத்து பிரச்சினையைத் திசை திருப்பலாம் என்று கனா காண்கின்றது இந்த ஆட்சிப் பீடம்.

மக்கள் எதிர்கொண்டுள்ள மோசமான நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து மக்களை விடுவித்து, ஆசுவாசப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு வக்கற்ற இந்த ஆட்சிப்பீடம், பிரச்சினைகளின் மூல உண்மைகளைத் திசைதிருப்ப முயன்று, மென்மேலும் பிரச்சினைகளை மோசமாக்கப் போவதுதான் மிச்சம்.



## தமிழர்களுக்கான சுயாட்சி முறையிலான தீர்வுக்கு பிரித்தானியா உதவ வேண்டும்

### பிரிட்டிஷ் தூதரக மனித உரிமை செயலரிடம் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழர்களுக்கான சுயாட்சி முறையிலான தீர்வு கிடைக்க பிரித்தானியா உதவ வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாற்றியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல், சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாற்றிக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு–

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகியோர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு தமிழர்கள் இந்த மண்ணிலே இறைமையோடுதான் வாழ்ந்தார்கள். பிரித்தானியாவினால்தான் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திரம் வழங்கிய பின்னர்தான் இலங்கை அரசால் எமக்கான இறைமை பறிக்கப்பட்டது. ஆகவே, பிரித்தானியாவிற்கும் பொறுப்பு இருக்கிறது எம்மை நாமே ஆளுகின்ற இறைமையுடன் கூடிய சுயாட்சி முறையிலான தீர்வு கிடைக்க இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அத்துடன் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதையும் பொறுப்புக்கூறல் மற்றும் மீள் நிகழாமையையும் உறுதிப்படுத்த பிரித்தானிய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவும் வடக்கு கிழக்கின் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பு இன்றித் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு தொழில் வழங்கக்கூடிய தொழிற்பேட்டைகளும் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பொருள்களைச் சுமந்தபடி கவனவீர்ப்பு போராட்டம்!

### வவுனியாவில் நேற்று நடந்தது



வாழ்க்கைச்சுமை மற்றும் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இணைந்து வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்கள் விலை ஏற்றத்துக்கு எதிராகவும் ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தை விரட்டியடிக்கும் நடவடிக்கையாகவும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

மண்ணெண்ணெய், பெற்றோல், சமையல் எரிவாயு,பானைகள், மின்சார உபகரணங்கள் போன்ற சமையலறை உபகரணங்களைச் சுமந்து வந்து இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு, பொருளாதார சுமை போன்ற தாங்கிய பதாதைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு






# 132 பேர் பலியான விமான விபத்து 49 ஆயிரம் துண்டுகளாக உடைந்தது

சீனாவில் நடுவானில் இருந்து பறந்து கொண்டிருந்த போது திடீரென கீழே விழுந்து நொறுங்கிய விமானம், 49 ஆயிரத்து 117 சிறிய துண்டுகளாக சிதைந்துள்ளது. சீனாவில் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737 விமானம், கடந்த 21ம் திகதி 132 பயணிகளுடன் குன்மிங்கில் இருந்து குவாங்சோ நோக்கி புறப்பட்டது. வுஜோ நகரில் உள்ள தெங்சியான் கவுண்டியில் உள்ள மோலாங் கிராமத்திற்கு அருகிலுள்ள மலைப் பகுதியில் 29 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, கட்டுப்பாட்டை இழந்து மலைக்குன்றுகளின் மீது செங்குத்தாக விழுந்து வெடித்து தீப்பிடித்து எரிந்தது. இதன் காரணமாக 20 மீற்றர் அகலத்துக்கு பள்ளம் ஏற்பட்டது. மேலும், அருகில் இருந்த காடும் தீப்பற்றியது. விமானத்தின் 2 கறுப்பு பெட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், விபத்து நடந்த இடத்தில் தொடர்ந்து மீட்பு குழுவினர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இது தொடர்பாக சீனாவின் சிவில் ஏவியேன் நிர்வாகத்திற்கான விமான பாதுகாப்பு இயக்குநர் ஜீ டாவ் கூறுகையில், விபத்து நடந்து பத்து நாள்களுக்கு பிறகு, சம்பவ இடத்தில் இருந்து இன்ஜின், ஸ்டெபிலைசர், இடது பக்க இறக்கையின் முனை உள்ளிட்டவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றார். இதேபோல், குவாங்சோ அரசு அதிகாரி சாங் சீவென் கூறுகையில், விபத்து நடந்த இடத்தில் இருந்து மீட்பு பணிக்காக 22 ஆயிரம் கனஅடி மீற்றர் மண் வெளியேற்றப்பட்டுள்ளது. விமானத்தின் 49,117 சிதைந்த துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன, என்றார்.

# ரஷ்யா மீது முதல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின உக்ரைன் நாட்டுப் படைகள்



உக்ரைன் ராணுவம் முதல் முறையாக ரஷ்யா மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியிருப்பது பதற்றத்தை அதிகரித்துள்ளது. உக்ரைனின் எல்லையில் இருந்து 40 கி.மீ. தூரத்தில் ரஷ்யாவிற்குள் இருக்கும் பெல்கொராட் என்ற இடத்தில் ஏராளமான எரிபொருள் சேமிப்பு கிடங்குகள் இருக்கின்றன. நேற்று இரவு அங்குள்ள கிடங்கு ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் 100 அடிக்கு மேலாக நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. முதலில் அது ஒரு விபத்தாக இருக்கக்கூடும் என கூறப்பட்டது. ஆனால் உக்ரைன் ராணுவத்தினர் ஏவுகணை வீசி எரிபொருள் கிடங்கை தகர்த்தமை ஆய்வில் தெரியவந்திருப்பதாக ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது. ஏவுகணை ஒன்று மின்னல் வேகத்தில் எரிபொருள் கிடங்கை தாக்கும் காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதலுக்கு பிறகு உக்ரைன் அரசுக்குச் சொந்தமான 2 ஹெலிக்கொப்டர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றன எனவும் ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது. ரஷ்யாவின் எரிபொருள் சேமிப்பு கிடங்கு மீது உக்ரைன் ராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியிருப்பதை அடுத்து உக்ரைன் மீதான தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது. இதனால் உக்ரைன் முழுவதுமாக பதற்றம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.



# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா மறுப்பு

## பதவி விலக வலியுறுத்தி அமெரிக்கா மிரட்டல்

பாகிஸ்தானில் ஆளும் இம்ரான் கான் அரசுக்கு பெரும்பான்மை பலம் குறைந்தமையால் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தனர். நாடாளுமன்றம் ஏப்ரல் 3ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், அன்றைய தினமே வாக்கெடுப்பு நடைபெறவும் வாய்ப்பு உள்ளது.

ஆனால் பதவியை விலக மாட்டேன் என திட்டவட்டமாக கூறி வரும் இம்ரான் கான், எதிர்க்கட்சிகள் சம்மதித்தால் மீண்டும் தேர்தலை நடத்தலாம் என கூறியுள்ளார். இந்த நிலையில் அந்நாட்டு மக்களிடம் உரையாற்றிய இம்ரான் கான், தான் 20 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடிய போது கடைசிபந்துவரைபோராடியதை இந்த உலகமே பார்த்துள்ளது. வாழ்வில் ஒருபோதும் தோல்வியை ஏற்கமாட்டேன் எனக் கூறியுள்ளார்.

நான் பதவி விலகாவிட்டால் பாகிஸ்தான் பெரும் பாதிப்புகளை சந்திக்கும் என வெளிநாடு ஒன்று மிரட்டியதாகவும் இம்ரான் கான் குற்றம் சாட்டியுள்ளார். முதலில் அமெரிக்கா என குறிப்பிட்டுள்ள இம்ரான் கான், பிறகு வெளிநாடு என மாற்றிக் கொண்டார். ஆனால் இம்ரான் கானின் குற்றச்சாட்டை அமெரிக்கா முற்றிலுமாக நிராகரித்துள்ளது. பாகிஸ்தானின் அரசியல் அமைப்பு விதிகள், நடைமுறைகளை முழுவதுமாக மதிப்பதாகவும் அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

# உக்ரைனில் ரஷ்யப் படைகளின் தாக்குதலால் 210 குழந்தைகள் உட்பட 5 ஆயிரம் பேர் சாவு



ரஷ்யா தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் பணிகளில் உக்ரைன் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, ஒரு மாதத்திற்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகிறது. கீவ், இர்பின் உள்ளிட்ட நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. கார்க்கிவ் நகரில் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்திய ரஷ்யாவால் அடுக்குமாடி குடியிருப்புகள் தரைமட்டமாகின. எரிவாயு குழாய்கள் சேதம் ஆகின. ஏராளமான கடைகள் எரிந்து நாசமாகின. மரியுபோல் நகரில் ரஷ்யா ஏவுகணை தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளதால் அங்கிருந்து மக்கள் செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் 45 பேருந்துகளில் வெளியேற்றப்பட்டனர்.

உக்ரைனில் ரஷ்யப் படைகளின் தாக்குதலால் 210 குழந்தைகள் உட்பட 5 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். இர்பின் நகரில் தாக்குதலில் உயிரிழந்தவர் களின் உடல்களை உக்ரைன் பேரிடர் மீட்புக் குழுவினர் பிளாஸ்ரிக் பைகள் மூலம் அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ரஷ்யாவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த கார்க்கிவ் புறநகர் பகுதி கிராமம் ஒன்றை உக்ரைன் படையினர் மீண்டும் கைப்பற்றியுள்ளோம் என அறிவித்துள்ளனர். தொடர் தாக்குதலில் கிவ் நகரம் முழுவதும் ஏராளமான வாகனங்கள் சிதறிக் கிடக்கும் நிலை காணப்படுகிறது. போரில் ரஷ்ய படைகள் பொஸ்பரஸ் குண்டு களை பயன்படுத்தியமையால் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

# பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர்களுடன் சந்திப்பு; தமிழக முதல்வர் ஸ்டாலின் ஊடகங்களுக்கு விவரிப்பு



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டெல்லியில் நேற்று பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேசினார். அப்போது, டெல்லி தி.மு.க. அலுவலக திறப்பு விழாவுக்கு வருமாறு பிரதமர் மோடிக்கு அவர் அழைப்பு விடுத்தார். அதற்கான அழைப்பிதழையும் வழங்கினார். அதன்பிறகு தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பிரதமரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார். அதன்பின்னர் மத்திய அமைச்சர்களான நிதின் கட்காரி, அமித் ஷா, ராஜ்நாத் சிங் ஆகியோரையும் அவர் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்புகளின் பின்னர் அவை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஊடகவியலாளர்களுக்கு தகவல் வழங்கியபோது,

முதலமைச்சரான பின் எனது மூன்றாவது டெல்லி பயணம் இது. பிரதமருடனான சந்திப்பின்போது அவரிடம் தமிழகம் சார்ந்த 14 அம்சக் கோரிக்கைகளை வழங்கினேன். குறிப்பாக நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என பிரதமரிடம் அழுத்தமாக பதிவு செய்துள்ளேன். மேகதாதுவில் அணை கட்ட அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளோம். மதுரவாயல் உயர்மட்ட சாலையை ஸ்ரீபெரும்புதூர் வரை நீடிக்கும்படி பிரதமரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளேன்.

இலங்கைத் தமிழர்களுக்கு உணவு, மருந்து வழங்க அனுமதி கோரியுள்ளோம். இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க நடவடிக்கை எடுக்கவும், கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். கோரிக்கைகளை பொறுமையாக கேட்ட பிரதமர் நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறியுள்ளார். பிரதமருடனான சந்திப்பு மகிழ்ச்சிக்குரியதாக அமைந்துள்ளது.

தமிழகத்திற்கான வெள்ள நிவாரண நிதி குறித்து உள்துறை மந்திரி அமித் ஷாவிடம் கலந்துரையாடியுள்ளேன். தமிழகத்தில் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்புக்கான ஆய்வு கூடம் அமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் வலியுறுத்தினேன். டெல்லியில் தி.மு.க. அலுவலகத் திறப்பு விழாவிற்கு அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன், என்று தமிழக முதலமைச்சர் மு.க.முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.

## பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து ராகுல்காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டம்




பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து நாடு முழுவதும் மூன்று கட்டப் போராட்டத்துக்கு காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. முதல் கட்டமாக இந்தியா முழுவதும் தெருக்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் காங்கிரஸார் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக மாவட்டங்களிலும், மூன்றாவது கட்டமாக மாநிலத் தலைநகரங்களிலும் போராட்டங்களைத் தீவிரப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று இந்தியா முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள், நிர்வாகிகள், மூத்த தலைவர்கள் அனைவரும் போராட்டத்தில் குதித்தனர். சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.

டெல்லியில் நாடாளுமன்றத்துக்கு அருகே விஜய்சவுக் பகுதியில் நடந்த காங்கிரஸ் போராட்டத்தில் ராகுல்காந்தி கலந்துகொண்டார். பெற்றோல், டீசல் விலைகளைக் குறைக்க வேண்டும் என்று போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினார்கள்.

ராகுல்காந்தி பங்கேற்ற போராட்டத்தில் நாடாளுமன்ற இரு சபை எம்.பிக்களும் கலந்து கொண்டனர். மேல்சபை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோரும் பங்கேற்றனர்.

மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டனக் கோஷங்களை எழுப்பியிருந்தார்கள்.



## கொரோனா இறப்பு நிவாரணங்கள்; 30 நாள்களுக்குள் தீர்வு காணவேண்டும்

### உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்

கொரோனா நிவாரணம் பெறுவதற்கான புதிய வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ளது. இதன்படி, கடந்த 20.03.2022 ஆம் திகதிக்கு முன் நிகழ்ந்த கொரோனா இறப்புகளுக்கு, 60 நாள்களுக்குள்ளும், 20.03.2022 முதல் நிகழ்ந்த கொரோனா இறப்புகளுக்கு, இறப்பு நிகழ்ந்த 90 நாள்களுக்குள்ளும் மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மனுக்களைச் சமர்ப்பிக்க இயலாதவர்கள், மாவட்ட வருவாய் அலுவலரிடம் முறையீடு செய்யலாம் என்றும், மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழு பரிசீலனை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா இறப்பு நிவாரணம் கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட நிர்வாகம் 30 நாள்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரிய காந்தப் புயலின் தாக்கத்தால் தமிழகத்தில் பாதிப்பு ஏற்படலாமென விஞ்ஞானிகள் தகவல்



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதியில் வானியல் ஆராய்ச்சி மையம் உள்ளது. இங்கு தொடர்ந்து சூரியனின் நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாள்களாக சூரியனில் தோன்றிவரும் கரும்புள்ளிகள் குறித்து வானியல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் தெரிவிக்கையில், தமிழகத்தில் சூரிய காந்தப்புயல் கண்டறியப்பட்டுள்ளது. இருதினங்களுக்கு முன்னர் மட்டும் 8 முறை சூரிய காந்தப்புயல் ஏற்பட்டுள்ளது. இது மிதமான முறையில் இருந்தது. இனிவரும் நாள்களில் சூரிய காந்தப் புயலின் தன்மை வலுவடையக் கூடும். இதனால், செயற்கைக்கோள், ஜி.பி.எஸ். விண்கலம் போன்றவை பாதிக்கப்படலாம், என்று எச்சரித்துள்ளனர்.

சூரிய காந்தப் புயல் பூமியை 8 முறை தாக்கியதை கொடைக்கானலில் உள்ள வான் இயற்பியல் ஆராய்ச்சி மையம் கண்டறிந்துள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெளியாகும் சக்தி வாய்ந்த காந்தப்புயல் பூமியின் வளிமண்டலத்தைத் தாக்கக்கூடும் என்று ஏற்கனவே நாசா விஞ்ஞானி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இதன் தாக்கம் குறித்து கொடைக்கானலில் உள்ள வான் இயற்பியல் ஆராய்ச்சி மையம் 5 தொலைநோக்கிகள் மூலம் கண்காணித்து வந்தது. அப்போது, இந்தக் காந்தப் புயல் ஒரு நாள் மட்டும் பூமியைத் தாக்கியமை தெரியவந்துள்ளது.

11 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரிய காந்தப் புயல் பூமியைத் தாக்கும் எனக் கூறும் விஞ்ஞானிகள் கடந்த 2003ஆம் ஆண்டு இதே போன்ற பாதிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.



# கொள்ளை, வாள்வெட்டுக் குழு மட்டக்களப்பில் மடக்கப்பட்டது

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், வாள், கோடரி, கைக்குண்டு மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் நால்வரை, நேற்றுத் தாங்கள் கைது செய்துள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி மற்றும் ஐயங்கேணி பிரதேசங்களில் வீடுடைப்பு, கொள்ளை மற்றும் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஐயங்கேணி ஜெயச்சந்திரன் ரீம் என்ற பெயரில் இயங்கிவந்த குழுவைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவால் மேற்படி பகுதிகளில் பெரும் அச்சுறுத்தல் நிலவி வந்துள்ளதையடுத்து, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸ் குழு நியமிக்கப்பட்டு, இரவு வேளைகளில் இந்தப் பகுதிகளில் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில், இக்குழுவினர் பதுங்கியிருந்த இடத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்ட பொலிஸார், நால்வரையும் கைதுசெய்து, அவர்களிடமிருந்த கைக்குண்டு, வாள், கோடரி மற்றும் 8 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் என்பவற்றையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், வவுனியா மற்றும் ஏறாவூர், ஐயங்கேணி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களில் 24 மற்றும் 26 வயதுடைய இருவருக்கு எதிராக வீடுடைப்பு, கொள்ளை மற்றும் வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பாக 19 வழக்குகள் இருக்கின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், முன்னர் புளொட் அமைப்பில் செயற்பட்டு வந்த வவுனியாவைச் சேர்ந்தவரிடமிருந்தே கைக்குண்டு மீட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நீண்ட கால சைக்கிள் திருடனை காரைதீவு பொலிஸார் மடக்கினர்



பாறுக் ஷிஹான்

நீண்டகாலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞனை காரைதீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக சைக்கிள்கள் களவாடப்பட்டு வருகின்றன என பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அவற்றின் அடிப்படையில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். நேற்று மதியம் காரைதீவு விசேட பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சுமார் 22 வயதுடைய இளைஞன் கைதாகினார்.

கைதான இளைஞனை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய இந்த சந்தேகநபரிடமிருந்து இதுவரை 15 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# முனைக்காடு, காஞ்சிரங்குடாவில் நாடகப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட – கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கான – நாடக பயிற்சிப் பட்டறை முனைக்காடு, காஞ்சிரங்குடா ஆகிய இடங்களில் அண்மையில் நடைபெற்றுள்ளது.


கூத்தம்பலம் கலைப் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இப்பயிற்சிப்பட்டறை இடம்பெற்றுள்ளது. இவ்வாண்டு க.பொ.த உயர்தர நாடகமும் அரங்கியலும் செய்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெறுபேறை அதிகரிக்கச் செய்வதை நோக்காகக் கொண்டு ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் 80க்கும்மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். கூத்தம்பலம் கலைப் பண்பாட்டு மையத்தினுடைய நிறைவேற்றுப் பணிப்பாளர் அ. விமல்ராஜ் வழிப்படுத்தலில் நடைபெற்றுள்ள இப்பயிற்சி பட்டறையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வளவாளர்களாக செயற்பட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளர் பதவியேற்பு

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக நா.மதிவண்ணன் (SLAS-I) இன்று கடமையேற்றுக்கொண்டார்

இவர் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலக உதவி செயலாளர், கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர், கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்த அனுபவம் கொண்ட இலங்கை நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரியாவார்.





# மட்டக்களப்பில் தொழிற்பயிற்சி வழிகாட்டலுக்கு 'ஆசீர்வாத கரங்கள்' மையம் புதன் திறந்துவைப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஆசீர்வாத கரங்கள் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிலைய திறப்பு விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை மட்டக்களப்பில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

ஆசீர்வாத கரங்கள் அமைப்பின் பிரதம போதகரும், தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிலையத்தின் ஸ்தாபகத் தலைவருமான வின்சன்ட் சகாயநாதன் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார். விசேட அதிதிகளாக 231 ஆவது இராணுவப் படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் திலீப பண்டார, இந்திய சுவிசேசகர் மோகன்சீ லாசரஸ் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்த தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிலையமே நேற்றுமுன்தினம் ஆசீர்வதிக்கப்பட்டு மிகவும் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டில்களில் வருகைதந்த அதிதிகள் வரவேற்கப்பட்டமையைத் தொடர்ந்து, தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிலையத்தின் பிரதான பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டு, பிரதான வாயிலில் 25 மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்திருந்த பிரதிநிதிகளால் நாடாவெட்டப்பட்டது. தொடர்ந்து இப்பயிற்சி நிலையத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் முதல் முதலாக தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிலையத்திற்குள் பிரவேசித்தனர். இந்நிகழ்வில் கனடா, ஜேர்மன், பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து பல்வேறுபட்ட சபைகளின் போதகர்கள் மற்றும் இறை விசுவாசிகள் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# ஆஸ்திரேலியாவுடனான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி 348 ஓட்டங்களை விரட்டியடித்து வெற்றிபெற்றது பாகிஸ்தான்!



ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான்அணி6விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1-1 என்ற கணக்கில் சமப்படுத்தியுள்ளது.

லாகூரில்நேற்றுநடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பென் மக்டமோட் 104 ஓட்டங்களையும் ட்ராவிஸ் ஹெட் 89 ஓட்டங்களையும் மார்னஸ் லபுசேன் 59 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் கீன் அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும் மொஹமட் வாசிம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 349 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 49ஓவர்களில்நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பாபர் அசாம் 114 ஓட்டங்களையும், இமாம் உல் ஹக் 106 ஓட்டங்களையும் பகர் சமான் 67 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஆஸ்திரேலிய அணியின் அடம் சம்பா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாபர் அசாம் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும்தொடரின் இறுதியுமான போட்டி நாளை நடைபெறவுள்ளது.



## மியாமி ஓபன் டென்னிஸ் மகளிர் தொடர் இறுதிப் போட்டிக்கு ஒசாகா முன்னேற்றம்

அமெரிக்காவின் புளோரிடாவில் நடைபெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டியில் சுவிட்ஸர்லாந்து வீராங்கனை பெலிண்டா பென்ச்சிச்சை எதிர்கொண்ட ஒசாகா ஆரம்பத்தில் 4-6 என்ற செட் கணக்கில் பின்னடைவைச் சந்தித்தார்.

பின்னர் சுதாகரித்துக்கொண்டு அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஒசாகா, 6-3, 6-3 என அடுத்தடுத்த 2 செட்களில் முன்னிலை பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில், போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக்குடன் ஒசாகா மோதவுள்ளார்

## ஓய்வு குறித்து நானே முடிவு செய்வேன் என்கிறார் கிறிஸ்டியானோ ரொனால்டோ




கால்பந்தாட்டத்தில் ஈடுபட விருப்பமில்லாத மனநிலை ஏற்படும் என்றால், எனது ஓய்வு முடிவைதானே அறிவிப்பேன் என்று ரொனால்டோ கூறியுள்ளார். உலகளவில் மில்லியன் கணக்கான ரசிகர்களை கொண்ட கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த இவர், கால்பந்தாட்டப் போட்டிகளில் பல சாதனைகளை தன்வசப்படுத்தியுள்ளார்.

இவரிடம் ஓய்வு குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோது அவர் கூறுகையில், என்னிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். என் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவது நான்தான். வேறு யாரும் இல்லை. எனக்கு அதிகமாக விளையாட வேண்டும் என்று தோன்றினால், நான் விளையாடுவேன். கால்பந்து விளையாட விருப்பமில்லை என்றால், எனது ஓய்வு முடிவை நானே அறிவிப்பேன். கால நிலையை பொறுத்து எனது ஓய்வு முடிவை அறிவிப்பேன், என்று அவர் பதிலளித்திருக்கிறார்.

# பாகிஸ்தான் தொடரிலிருந்து காயத்தால் விலகிய மார்ஷ் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடும் நம்பிக்கையில்

*பாகிஸ்தான் சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை வென்றதையடுத்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் விளையாடி வருகிறது. காயம் காரணமாக இந்த ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களிலிருந்து மிட்செல் மார்ஷ் விலகியிருந்தார்.*

*ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரரான மிட்செல் மார்ஷை டெல்லி அணி 6.5 கோடி ரூபாவுக்கு வாங்கியிருந்தது. அவருக்கு சர்வதேச போட்டிகள் இருப்பதால் முதல் 3 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.*

*இந்தநிலையில், மிட்செல் மார்ஷ் டெல்லி அணியுடன் இணைவார் எனவும், டெல்லி அணியின் பிசியோதெரபிஸ்ட்டாக இருக்கும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பட்பர்காட், தனிமைப்படுத்தும் காலத்தில் மிட்செல் மார்ஷ் காயத்தில் இருந்து மீள்வதை நிர்வகித்துக் கொள்வார் எனவும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதனால், ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பகுதியில் மிட்செல் மார்ஷ் விளையாட வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.*



*பாகிஸ்தான் தொடரில் விளையாடதமை மிகுந்த வருத்தமாக உள்ளதாகவும், ஆஸ்திரேலிய அணியின் அடுத்த தொடருக்காக எதிர்பார்த்துள்ளேன் எனவும் மார்ஷ் தெரிவித்திருக்கிறார். கடந்த வருடத்துக்கான ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இவரின் பங்கு முக்கிய இடத்தைப் பெற்றது. இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் மார்ஷ் 77 ஓட்டங்களை எடுத்தது ஆஸ்திரேலிய அணி வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்ற உதவியிருந்தார்.*

# தமிழ் அரசியல்வாதிகள் சகலரும் பிச்சைக்காரர்!

## ஆறு. திருமுருகனின் சமூகப்பணியை எந்த அரசியல்வாதியும் ஆற்றவில்லை

### தந்தை செல்வாவின் ஜனனதினத்தில் துணைவேந்தர் இடித்துரைப்பு

தமிழ்அரசியல்வாதிகள்அனைவரும் பிச்சைக்காரர்கள். அனைவரும் திருத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 124 ஆவது ஜனன தின நிகழ்வில் நேற்று (வியாழக்கிழமை) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்அரசியல்வாதிகள்அனைவரும் பிச்சைக்காரர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் காணப்படுகின்றார்கள். ஆனால் எமது அரசியல்வாதிகளிடம் அவர்களுக்கு உதவுவதற்கு எந்த ஒரு திட்டமும் இல்லை, நிகழ்ச்சி நிரலும் இல்லை.

அடுத்த மாகாணசபைத் தேர்தலுக்கு எவ்வாறு செயற்படுவது தொடர்பில் செயற்படுகிறார்களே தவிர தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகச் செயற்படவில்லை. எங்களிடம் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை, ஒரு திட்டமிடல் இல்லை.

ஏதாவது ஒரு சம்பவம் என்றால் முதல் நாள் கூட்டத்தைக் கூட்டி ஓர் அறிக்கையைத் தயாரித்து அதை வாசித்துவிட்டுச் செல்கின்றமைதான் தற்போதுள்ள நிலைமை. அது மாற்றியமைக்கப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கை மனதளவில் ஒற்றுமையாக்க வேண்டும். அத்தோடு வடக்கு கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம்? எவ்வாறு முன்னேற்றலாம் ? அதற்கென்று ஒரு நிகழ்ச்சி நிரல் ஒரு திட்டமிடல் எங்களிடம் இல்லை.

நாங்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம், ஆனால் தொடர்ந்தும் அவ்வாறே இருக்கத் தேவையில்லை. எமக்கென்று ஒரு பாரம்பரியம் உள்ளது, அவற்றைக் காப்பாற்றுவதற்கு முதலில் நமது அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும். ஏனைய உலக நாடுகளில் அந்த நாடுகளின் தயாரிப்புகளில் அந்த நாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்படும்.

ஆனால் யாழ்ப்பாண தயாரிப்பு என்று ஏதாவது உள்ளதா? அரசியல்வாதிகள் யாராவது எதையாவது சுட்டிக்காட்டுகிறார்களா? இல்லை. உதாரணமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் எவ்வளவு சமூகப்பணிசெய்கின்றார்.

ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது அவ்வளவு விடயத்தைச் செய்ய முடிந்ததா? இல்லை. அவர் எந்த ஓர் அரசியல் தலையீடும் இன்றி தன்னிச்சையாகப் பல சமூக செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலையில், எந்த ஒரு செயற்பாடுகளும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இன்று வரை செயற்படுத்தப்படவில்லை.

மார்ச் மாதமானது மகளிர் தினத்துக்குரிய மாதம். அந்த மகளிர் தின மாதத்தில் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் ஏதாவது தேவைப்படும் மக்களுக்கு உதவி செய்யலாம். அத்தோடு இந்த அரசியல்வாதிகள் முதலில் தமக்குரிய அரச வீடு, சொகுசு வாகனம், சொகுசு வாழ்க்கை அனைத்தையும் தவிர்த்து மக்களோடு மக்களாக இருந்து வாழ்வதன் மூலமே மக்களுடைய பிரச்சினைகள் தெரியும்.



தற்பொழுது தந்தை செல்வா அறக்கட்டளை நிதியம் சில செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. அது மிகவும் வரவேற்கத்தக்க விடயம் அவர்கள் அதனை தொடர்ச்சியாகச் செயற்படுத்த வேண்டும். தந்தை செல்வாவின் நோக்குதான் தமிழ் மக்களை உலகத்துக்குக் காட்டியது. எமக்கு ஒரு கலை, கலாசாரம் உள்ளது.

எமக்கு ஒரு மொழி உள்ளது என்பதை உலக நாடுகளுக்குக் காண்பித்தது தந்தை செல்வாவின் செயற்பாடுகளே. தற்பொழுது தமிழ் அரசியல்வாதிகளையும் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். அதாவது வடக்கில் ஆள்கள் இல்லை என்று கொழும்பிலிருந்து அரசியலுக்கு ஆள்களை இறக்குகிறார்கள்.

இதெல்லாம் திருத்தப்பட வேண்டிய விடயம். இந்திய நாட்டைப் பார்த்தால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ இன மக்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்று உலக நாடுகளில் தலைசிறந்து விளங்குகின்றார்கள். அதற்குக் காரணம் சிறந்த அரசியல் யாப்பை உருவாக்கியமையே.

ஆனால் நமது அரசியல்வாதிகள் அரசியல் யாப்பை உருவாக்குவது தொடர்பில் சிந்திக்கவில்லை. இன்றும் 13 ,13 பிளஸ், சமஷ்டி என்று தமக்குள்ளே கருத்து முரண்பாடே தவிர செயற்படுத்த முடியவில்லை. தமிழ் மக்களின் தந்தை என போற்றப்படும் தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களால் மட்டுமல்லர் இலங்கையில் உள்ள அனைவராலும் அனைத்து இன மக்களாலும் போற்றப்பட்டவர்.

அவரது வாழ்க்கை முறை மிகவும் வித்தியாசமானது, அவர் மிகவும் மென்மையானவர். அரசியலுக்கு வந்த பின்னரும் அவர் சிறந்து மென்மையான போக்குடன் செயற்பட்டதன் காரணமாக அவரை அனைவரும் மதித்துச் செயற்பட்டார்கள். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.





# சமையல் எரிவாயுவுக்காகக் காத்திருந்த மக்களை 'நாயே' என திட்டிய வர்த்தகர்

### கொட்டகலையில் சம்பவம்

சமையல்எரிவாயுவைவாங்குவதற்காகநீண்டநேரம் வரிசையில் காத்திருந்த மக்களை, 'நாயே' என விளித்து – திட்டி, வர்த்தக நிலைய உரிமையாளர் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துகொண்ட சம்பவமொன்று நேற்று (வியாழக்கிழமை) கொட்டகலை நகரில் பதிவானது. நாட்டில் எரிபொருளுக்கும், சமையல் எரிவாயுவுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றைப் பெறுவதற்கு நீண்டநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை மக்களுக்கும், சாரதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. கொட்டகலை பகுதியிலும் இந்நிலைமை காணப்படுகின்றது. கொட்டகலை நகரி லுள்ள இரு வர்த்தக நிலையங்கள் ஊடாகவே சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி அதிக விலைக்கு லிற்றோ எரிவாயு விநியோகித்த வர்த்தகர் ஒருவரின் அனுமதிப் பத்திரத்தை லிற்றோ நிறுவனம் இடைநிறுத்தி வைத்துள்ளது. இந்நிலையில் மற்றைய வர்த்தக நிலையத்திலுள்ள உரிமையாளர் வாடிக்கையாளர்களை மதித்து நடப்பதில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி வர்த்தக நிலையத்துக்கு நேற்று சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்துள்ளன. எனினும், சுமார் 50 பேருக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏனைய சிலிண்டர்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இதனால் சிலர் வீடுகளுக்கு திரும்பினர். சிலர், இதனை எதிர்த்துப் போராடினர். ஏன் இவ்வாறு செயற்படுகின்றீர்கள் என வினவிய போதே, வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், வாடிக்கையாளர்களை 'நாயே' என விளித்துள்ளார். இதனால்ஆத்திரமடைந்தவாடிக்கையாளர்கள் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் பதற்றமான நிலை ஏற்பட்டது. இதனையடுத்து கொட்டகலை வர்த்தக சங்க தலைவர் விஸ்வநாதன் புஷ்பாவும், திம்புள்ள பத்தனை பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். நிலைமையை சுமுக நிலைக்கு கொண்டு வந்தனர். சம்பந்தப்பட்ட உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் மன்னிப்புக் கோரினார். அதன்பிறகு, சில வாடிக்கையாளர் களுக்கு எரிவாயு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2022இல் வெளியிடப்பெற்றது.